**மிருகக் காட்சிசாலை அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியம் - 2018**

------------------------------------------------------------------------------------------------------------------------

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

மிருகக் காட்சிசாலை அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தை தவிர நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.
- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாகபோதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் ஈடுபாட்டை தீர்மானிக்கப்படுகின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த

வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதாஎனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு "முறையாக திட்டமிடப்பட்ட" உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக் கொள்வது அவசியமாகவுள்ளது பொதுப் பேரேடு, நாட்குறிப்பு, நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்ற பிரதான கணக்கீட்டு அறிக்கைகளை பேணிச் செல்லல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ள தலைப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | உரிய நியமத்திற்குரிய தொடர்புடைய இணக்கமின்மை | முகாமைத்துவத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நியமம் இலக்கம் 01 இன் 53 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வருமான மற்றும் செலவினக் கணக்கில் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு தரவுகள் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் 53 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்குகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டதன் பிரகாரம் வருமானக் கூற்று வருமான செலவினக் கணக்கொன்றாக தயாரிக்கும் போது முன்னைய ஆண்டின் புள்ளி விபர தகவல்களை வெளிப்படுத்த முடியாதிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டின் கணக்குகளை தயாரிக்கும் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்டும் என தயவு செய்து தெரிவித்துக் கொள்கிறேன். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் 53 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நியம இலக்கம் 02 ஆம் அத்தியாயத்தின் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் காசு மற்றும் அதற்கு சமனானவைகளின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகளுக்கு இடையே வேறுபாடு காசுப் பாய்ச்சல் கூற்றில் தெளிவாக காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த காசுப் பாய்ச்சல் கூற்றில் தேறிய காசுப் பாய்ச்சல் மாத்திரம் காண்பிக்கப்பட்டிருந்தது. | திணைக்களத்திற்குச் சொந்தமான அபிவிருத்தி நிதியத்தின் மீதிகள் ஆண்டின் இறுதியில் பொது திறைசேரிக்கு அனுப்புவதற்கு நேர்வதால் அதற்கு பின்வரும் ஆண்டின் ஆரம்ப மீதி பூச்சியமாக கருதப்படுகின்றது. ஆதலால் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகளுக்கு இடையே வேறுபாடு இறுதி மீதியாக வருவதால் காசுப்பாய்ச்சல் கூற்றில் அவ்வாறு பதிவு செய்வதற்கு நேர்வதாக தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | நியம இலக்கம் 07 இன் பிரகாரம் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டு முடிவடைந்திருந்த போதிலும் பயனுள்ள ஆயுட் காலம் ஆண்டு தோறும் மீளாய்வு செய்யப்படாமையினால் தற்போது | அபிவிருத்தி நிதியத்திற்குரிய சொத்துக்கள் அனைத்தும் அரச கணக்குகள் திணைக்களத்தின் இணக்கப்பாட்டின் பேரில் அரசின் நிதித்திற்கு 2019 ஆம் | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| பயன்படுத்தப்படும் ரூபா 72,941,488 ஆன நிலையான சொத்துக்களின் முகப்பு பெறுமதி நிதிக்கூற்றுக்களில் நிருபணமாக வில்லை ஆதலால் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | ஆண்டின் போது மாற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் அதன் போது பெறுமானத்தேய்வு முடிவடைந்த அபிவிருத்தி நிதியத்திற்குரிய வாகனங்களை மீண்டும் மதிப்பீடு செய்வதற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறே கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்களிற்காக விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள மதிப்பீட்டு அறிக்கையின் பெறுமதியை அடிப்படையாகக் கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இயந்திரங்கள், மற்றும் உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் என்பன மீண்டும் மதிப்பீடுவதற்காக தற்போது குழு நியமிக்கப்பட்டுள்ளதாக தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். | |

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்களாக காண்பிக்கப்பட வேண்டிய ரூபா 1,442,352,853 நடைமுறை வேலையாக காண்பிக்கப்பட்டிருந்தது. | அபிவிருத்தி நிதியத்திற்குரிய நிலையான சொத்துக்கள் அரச கணக்குகள் திணைக்களத்தின் பேரில் 2019 ஆம் ஆண்டின் போது அரசின் நிதியத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதால் அம் மாற்றங்களை செய்யும் போது இத்தவறினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். | நிலையான சொத்துக்களாக காண்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | சேவை வழங்கும் நிறுவனமொன்றின் மிருக காட்சிசாலை திணைக்களத்தின் மிருகக்காட்சிசாலை நிதியத்திற்குரிய விற்பனை கிரயமொன்று இருக்க முடியாத போதிலும் இலாப நட்டக் கூற்றில் | எதிர்வரும் ஆண்டில் கணக்குகளை தயாரிக்கும் போது மிருககங்களின், உணவு மிருகங்களுக்கான மருத்துகள், நுழைவுச்சீட்டு அச்சீட்டு இருப்புக்கள், விற்பனை கிரயத்திற்கு | அந்த இருப்புக்களில் பயன்படுத்தப்பட்ட பெறுமதி மாத்திரம் வருமானச் செலவினமாக உள்ளடக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மூலம் விற்பனைக் கிரயம் ரூபா 302,521,708 ஆக கணக்கிடப்பட்டு வருமானம் மற்றும் செலவினக் கணக்கிற்கு சீராக்கப்பட்டிருந்தது. | சீராக்கம் செய்யப்பட்டு, பயன்படுத்தப்படும் இருப்புக்களின் பெறுமதி மாத்திரம் வருமானச் செலவினமாக உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். | |
| (இ) | சமருஹலே பற்றாக்குறை ரூபா 35,357 என்ற வகையில் கணக்கிடப்பட்டிருந்த போதிலும் அது நிதியத்தின் வருமானச் செலவு கணக்கிற்கு சீராக்கும் போது ரூபா 277,821 இலாபமாக காட்டப்பட்டிருந்தது. | சமரு விற்பனை நிலையத்தின் இலாபத்தை கணக்கிடும் போது ஏற்பட்டுள்ள தவறினை எதிர்வரும் ஆண்டின் கணக்குகளை தயாரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | 2012 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரை கொள்வனவு செய்யப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக பின்பற்றப்பட்ட பெறுமானத் தேய்வு கொள்கையில் தவறு காரணமாக ரூபா 37,982,155 ஆன ஏற்பாடு கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | அபிவிருத்தி நிதியத்தின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் போன சகல சொத்துக்கள் 2019 ஆம் ஆண்டின் போது அரச கணக்குகள் திணைக்களத்தின் இணக்கப்பாட்டின் பேரில் அரசின் நிதியத்திற்கு மாற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதால் அம்மாற்றம் மேற்கொள்ளும் போது சொத்துக்கள் கொள்வனவு செய்த திகதியை அடிப்படையாகக் கொண்டு பெறுமானத் தேய்வு சீராக்கம் மேற்கொள்ளப்பட்டு உரிய கணக்குகளை பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். | சரியான பெறுமானத்தேய்வுக் கொள்கை பின்பற்றப்பட வேண்டும். |

1.6 **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | அபிவிருத்தி நிதியத்திற்குரிய நிலையான சொத்துக்கள் அரச கணக்குகள் திணைக்களத்தின் இணக்கப்பாட்டின் பேரில் அரசின் நிதித்திற்கு 2019 ஆம் ஆண்டின் போது மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதால் இவ்வாண்டின் இறுதியில் நிலையான சொத்துக்கள் பதிவேட்டை தயாரித்து முடிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதாக தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். | சற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 448,955,427 ஆன மிகையொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 507,779,651 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 58,824,224 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு மிருகங்களுக்கான உணவுச் செலவினம் மற்றும் ஏனைய செலவினம் ரூபா 48,375,556 ஆல் அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) மிருககாட்சிசாலைகள் திணைக்களம் காச நோய் பீடிக்கப்பட்ட யானைகளுக்கு தேவையான சில மருந்துகளை | மிருகக்காட்சிசாலையில் காச நோய்கள் தொற்றியுள்ள யானைகளுக்காக சிகிச்சையளிப்பதற்கு | பற்றாக்குறையின்றி தொடராக மருந்துகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெற்றுக் கொள்வதில் பற்றாக்குறை காரணமாக நோய்வாய்ப்பட்ட யானைகளுக்கு மருந்துகளை வழங்க முடியாமல் இருந்தது. | பயன்படுத்தும் மருந்து இலங்கைக்கு சுகாதார அமைச்சின் மருத்துவ வழங்கல் பிரிவு மூலம் இறக்குமதி செய்யப்படுகின்றது அவர்களால் இறக்குமதி செய்யப்படும் மருந்துகள் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் மூலம் விநியோகிக்கப்படுகின்றது. அங்கு சிறியளவு இறக்குமதி செய்யப்படுவதுடன் இம் மருந்துகள் வேறு எந்தவொரு நிறுவனத்தினாலும் இறக்குமதி செய்யப்படாதமையால் யானைகளுக்காக தேவையான மருந்துகளை பெற்றுக்கொள்ள முடியாத நிலைமையொன்று உருவாகியிருந்தது. இந்நோய் தொற்றியுள்ள யானைகள் நாரம்பெத்த பெயருடைய விஷேட நிவாரண நிறுவனத்தில் தடுத்து வைதக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுவதால் ஏனைய மிருகங்களுக்கும் மனிதர்களுக்கும் தொற்று ஆபத்து குறைந்த மட்டத்தில் இருப்பதாக தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். | |
| (ஆ) | 2019 மே மாதம் மிருககாட்சிசாலைகள் திணைக்களத்திலன் மருந்துக் களஞ்சியத்தில் மேற்கொண்ட பௌதீக பிசோதனையின் போது ரூபா 393,388 பெறுமதியான காலாவதியான மருந்துகளை கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மிருக்ககாட்சிசாலைகள் திணைக்களத்தின் மருந்துக் களஞ்சியத்தில் காணப்படும் காலாவதியான மருந்துகள் ஏனைய மருந்துகளுடன் வேறுபடுத்தி களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதுடன எதிர்காலத்தில் அவை முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டு கைதவிர்ப்பதற்கு உள்ளதாக தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். | காலாவதியான மருந்துகளை முறையாக கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாட்டிற்குட்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) ரூபா 9,584,223 பெறுமதியான 04 மோட்டார் வாகனங்கள் 2014 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன. | தெஹிவள மிருகக்காட்சி சாலையில் காணப்படும் 04 வாகனங்ககள் தொடர்பாக தற்போது குழுவொன்று நியமிக்கப்பட்டு கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தயவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். | திருத்தியமைக்க அல்லது கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) பின்னவல மிருககாட்சிசாலை வைத்தியசாலையில் எக்ஸ்ரே இயந்திரம் 2014 ஆம் ஆண்டு முதல் செயலற்று இருந்த போதிலும் 2019 மாதம் வரை திருத்தியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பின்னவலே யானைகள் காப்பகத்தில் காணப்படும் எக்ஸ்ரே இயந்திரம் 2014 ஆம் ஆண்டு முதல் செயலற்று காணப்பட்டதுடன் அது தொடர்பாக குறித்த முகவர் நிறுவனம் அழைக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது அந்த எக்ஸ்ரே இயந்திரத்தை மீண்டும் திருத்தம் செய்து பயன்பாட்டிற்கு எடுக்க முடியாதென அறிவிக்கப்பட்டிருந்தது. ஆதலால் புதிய எக்ஸ்ரே இயந்திரமொன்றை கொள்வனவு செய்வதற்காக 2017 ஆம் ஆண்டில் போது பெறுகை மேற்கொள்ளப்பட்ட போதும் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட விதந்துரைகள் மற்றும் ஒப்பிடப்பட்ட கூறுவிலைப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. மீண்டும் அதற்காக கேள்வி கோருவதற்கான தேவையான நடவடிக்கைகள் எடுத்து வருவதாக தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். | திருத்தியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 பெறுகை முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மிருகங்களுக்கான உணவு கொள்வனவு செய்யும் போது ரூபா 144,344,129 தொகை ஒப்பந்தங்களிற்காக 2006 இன் பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.3.13 (ஈ) வழிகாட்டலின் பிரகாரம் நிபந்தனைகள் இல்லாமல் பணமாக்க கூடிய பிணை பொறுப்பினை நிறுவனத் தலைவரின் பெயரில் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | மிருகங்களுக்கான உணவு கொள்வனவு செய்யும் போது அமைச்சின் பெறுகை குழு மூலம் மேற்கொள்ளப்படுகின்ற கேள்வி பாதுகாப்பு பிணை, செயலாளர், அமைச்சு பெறுகை குழு, நிலைபேறான அபிவிருத்தி, வனசீவராசிகள், மற்றும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சிற்கு வழங்கல் இடம் பெற்றுள்ளதுடன் எதிர்வரும் பெறுகைகளின் போது திணைக்கள தலைவரின் பெயரில் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுத்து வருவதாக தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். | பிணை பொறுப்பினை நிறுவனத் தலைவரின் பெயரில் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (ஆ) | அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் 07 நிலுவைகளில் ஒரு நிறுவனம் தெரிவு செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோள் நிதி அமைச்சரின் அவதானிப்பின் பிரகாரம் பொருத்தமான நடைமுறையொன்றின் கீழ் தெரிவு செய்யப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது.<br>எவ்வாறாயினும், கேள்வி கோரல் இல்லாமல் தெஹிவள மீன்தொட்டி அபிவிருத்தி செய்யும் I மற்றும் II ஆம் கட்டங்களின் பெறுமதி ரூபா 3,253,715 மற்றும் ரூபா 3,025,600 தொகையான ஒப்பந்தங்கள் நேரடியாக அரச அபிவிருத்தி நிர்மாணக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.<br>நிர்மாணத்தை பூர்த்தி செய்யாமை காரணமாக முதலாம் கட்டத்தின் கீழ் ரூபா 325,577 மற்றும் இரண்டாம் கட்டத்தின் கீழ் ரூபா 302,560 ஆன தாமதக் கட்டணங்கள் அறவிடப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2016 ஆகஸ்ட் 02 ஆந் திகதிகள் அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் செயற்திட்டங்ள் உரிய நிறுவனங்களுக்கு எவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது என்பது தெளிவாக குறிப்பிடப்படாமையால் செயற்திட்டத்தின் தன்மையின் பிரகாரம் ஒவ்வொரு நிர்மாண நிறுவனத்தின் இயலளவு, மிருக்காட்சிசாலையில் முன்னர் மேற்கொண்ட மற்றும் அச்சந்தர்ப்பத்தில் செய்யப்பட்டு வரும் செயற்திட்டங்களைக் கருத்திற் கொண்டு அங்கீகாரம் கிடைத்துள்ள நிறுவனங்களுக்க இடையே மிகவும் பொருத்தமானதென கருதும் நிறுவனத்திற்கு ஒப்பந்த கையளிப்பு இடம் பெற்றிருந்தது. அதன் பிரகாரம் மேற்படி செயற்திட்டம் அரச அபிவிருத்தி நிர்மாணக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கியுள்ளதாக தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இச் செயற்திட்டத்தில் இடம் பெற்றுள்ள தாமதம் தொடர்பாக நிறுவனத்தினால் அவ்வப்போது காலத்தை நீடிப்பதற்காக வேண்டுகோள் விடப்பட்டிருந்த | நிறுவனங்களை தெரிவுசெய்யும் போது கூறுவிலை கோரப்பட வேண்டும். |

போதிலும் திணைக்களத்தினால் அந்த வேண்டுகோளுக்காக இணக்கப்பாட்டினை வழங்கியிருக்கவில்லை. அவ்வாறே கடைசி சந்தர்ப்பத்தின் போது சமர்ப்பிக்கப்பட்ட அல்லது இறுதிப் பட்டியலுக்கு கொடுப்பனவு செய்யும் போது தாமதக் கட்டணங்களை அறவிடுவதற்கு உள்ளதாக தயவுடன் தெரிவித்துக்கொள்கிறேன் மேற்படி நிர்மாண நிறுவனத்தின் செயலாற்றல் பிணை பொறுப்பு பெற்றுக்கொள்வதிலிருந்து விடுவிப்பதற்காக அமைச்சரவையின் அங்கீகாரமொன்று பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இதன் பிரதியொன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளதாக தயவுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்